16th March 1965]

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இது பொங்கல் விழா முதல் நாள், தைப்பொங்கல் அன்று மட்டும் தான் ரிபேட் கொடுக்கப்படு கிறது. மற்ற நாட்களில் வாங்கினால் ரிபேட் கிடையாது. தமிழ் நாட்டில் அநேகமாக மாட்டுப் பொங்கலன்றுதான் விசேஷமாகப் புத்தாடை வாங்கி அணிவார்களாதலால், இந்த ரிபேட்டை இன்னும் 2 நாட்களுக்கும் நீடித்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த மாதிரி ஸ்டேட் ஹாண்ட் லூம் சொஸைடி கேட்டிருந்தால் எங்களுக்கு ஒரு அப்ஜெக்ஷனும் கிடை யாது. துணிகள் அதிகமாக விற்க வேண்டுமென்பதற்குத்தான் ரிபேட் கொடுக்கிறோம். 2 நாள் கூட்டி ரிபேட் கொடுத்தால் துணி அதிகமாக விற்குமென்றால், அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

Delay in disbursement of Harijan and Backward scholarships

* 248 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the reasons for the inordinate delay in the disbursement of scholarships to the students belonging to Harijan and Backward Classes; and

(*b*) whether any proposal is under consideration for revising the procedure to ensure speedy disbursement?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There has been no delay in the disbursement of scholarships to the students belonging to Harijan and Backward Classes this year.

(*b*) Does not arise.

[(அ) ஹரிஜன மாணவர்களுக்கும், பின்னிலே வகுப்பு மாணவர் களுக்கும் உபகாரச் சம்பளத் தொகைகளை வழங்குவதில் எவ்விதத் தாமதமும் இருந்ததில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.]

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த உபகாரச் சம்பளம் எந்த அடிப்படை யில் கொடுக்கப்படுகிறது ? மார்க்குகள் வாங்குகிறதின் அடிப்படையிலா, வருமானத்தின் அடிப்படையிலா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் வருமான அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. மாநில சர்க்கார் ஸ்காலர்ஷிப் பின் தங்கிய மாணவர்கள் வாங்குகிற மார்க்குகள் 50-க்கு மேல் இருந்தால், கொடுக்கப்படுகிறது. ஹரிஜனங்கள், ஆதிவாசிகளுக்கு மார்க்கு ரீதியில் இல்லாமல் எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : உபகாரச் சம்பளம் கொடுக்க எந்தத் திங்களிலிருந்து துவங்கப்படுகிறது, எந்தத் திங்களில் முடிவடைகிறது என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு ஆண்டிலும் ஜுலை 7-ம் தேதி, அட்மிஷன் ஆகி 15 நாட்களுக்கு உள்ளாக மத்திய சர்க்கார் ஸ்காலர் ஷிப்புக்கு அனுப்ப வேண்டும். மாநில சர்க்காரைப் பொருத்த வரை ஜுலை 15-க்குள், அட்மிஷன் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள், மத்திய சர்க்கா ருக்கு அனுப்பவேண்டும். எந்தத் திங்களுக்குள் முடியும் என்ற தகவல் என்னிடம் இப்போது இல்லை. முன்னே, பின்னே வந்தாலும் "கன்சிடர்" பண்ணுவது உண்டு.

திரு. அ. ராகவ ரெட்டி : 1964-65 வருஷத்திய ஸ்காலர்ஷிப் இன்னும் மார்ச் மாதத்தில் கூடக் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி சமீபத்தில் விசாரித்தபோது கவர்மெண்ட் ஸாங்ஷன் கொடுக்கவில்லை என்று சொன்னார்

[16th March 1965

கள். மார்ச் மாதம் ஸ்காலர்ஷிப் கொடுக்கிற நிலைமை இருக்கிறதென்ருல், இம்மாதிரி ஏற்படாமல் இருக்க அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே அரசாங்கம் ஸ்காலர்ஷிப்புக்காக ஒதுக்கின பணம் ஆகி விட்டது. மேற்கொண்டு பணம் வேண்டுமென்று "பைனன்ஸ் டிபார்ட்மென்டுக்கு" எழுதியிருக்கிறோம். அவர்கள் கொடுத்தால்தான் நாங்கள் கொடுக்க முடியும். மேற்கொண்டு கொடுக்கும்படி நாங்கள் கேட்கிறோம்.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்த ஸ்காலர்ஷிப் பெறுவதற்கு 50 மார்க்குகள் என்று தகுதி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தகுதியை 45 மார்க்குகள் வாங்கினவர்களுக்கு எல்லாம் ஸ்காலர்ஷிப் வழங்கப்படும் என்று மாற்றியமைக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மாணவிகளைப் பொறுத்த வரையில் 45 மார்க்குகள் வாங்கினவர்களுக்கு எல்லாம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாணவர்கள் விஷயத்தில் ஏதேனும் தனிச் சலுகைகள் கொடுக்கலாம் என்று சொன்னுல் அந்தச் சமயத்தில் அவை கவனிக்கப்படும்.

திரு ஆ. கு. சுப்பையா : இந்த ஆண்டு மத்திய சர்க்காருடைய நிதியிலிருந்து எவ்வளவு ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு இருக்கிறது ? மாநில சர்க்காரால் எவ்வளவு ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன்: மத்திய சர்க்காரிலிருந்து ஷெட்யூல்ட் கேஸ்ட்ஸ் அண்ட் ஷெட்யூல்ட் டிரைப்ஸ்-க்கு முதலிலே 8,83,400 ரூபாயும், அடுத்தபடி அடிஷனலாக 7,55,000 ரூபாயும், அடிஷனல் அமௌண்டாக (அன்டர் கன்சிடரேஷன்) 2,27,000 ரூபாயும், எக்கனமிக்கலி பேக்வார்ட் மாணவர்களுக்கு 14,84,000 ரூபாயும் ஆக மொத்தம் ரூ. 33,49,400 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்டேட் கவர்ன்மென்டைப் பொறுத்த மட்டிலும் டினேட்டிஃபைட் கம்யூனிட்டிகளுக்காகக் குறிப்பாக 4,00,000 ரூபாயும், அடிஷனல் அமௌண்டாக 4,16,100 ரூபாயும், எலிஜிபிள் கம்யூனிட்டிகளுக்கு 25,00,000 ரூபாயும், அடிஷனல் அலாட்மெண்டாக 10,00,000 ரூபாயும், பேக்வார்ட் கிளாஸ்களுக்கு 19,00,000 ரூபாயும், அடிஷனலாக 11,00,000 ரூபாயும், மொத்தம் ரூ. 73,16,100 வரை கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. அ. துரையரசன் : தலைவர் அவர்களே, தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 80 கிராமங்களில் "வல்லம்பர்" என்ற ஒரு சமூகத்தினர் பரந்து இருக்கிறார்கள். அவர்களைப் பின் தங்கியவர்கள் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கும், கல்வி போன்ற சலுகைகள் அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த எந்த சமூகத்தினர்கள் எல்லாம் பேக்வர்ட் கம்யூனிட்டி லிஸ்டிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட சமூகத்தினரைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : போஸ்ட் கிராஜுவேட்ஸ், பாலிடெக்னிக்கில் படிக்கிறவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தொகை வரையறுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அப்படி இல்லாமல் தகுதியுள்ள மாணவர்கள் அனைவருக்கும் சலுகைகள் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே இந்த வகையில் கொஞ்சம் தான் கொடுத்து வந்தோம். அதாவது முன்பு எம். ஏ. படித்தவர்களுக்கு 40 பேர்களுக்குக் கொடுத்து வந்தோம். அது இப்பொழுது 100 ஆகியிருக்

16th March 1965]

கிறது. லா காலேஜில் 14 பேர்களுக்குக் கொடுத்து வந்தோம். இப்பொழுது அது 40 ஆகியிருக்கிறது. மாணவர்களுக்கு எத்தகைய ஒத்தாசை செய்ய வேண்டுமோ அவையெல்லாம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்த ஸ்காலர்ஷிப் பெற்றுப் படித்த மாணவர்கள் படித்துவிட்டுச் சென்று மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் பெற்ற ஸ்காலர்ஷிப் பணத்தைத் திரும்பக் கட்டவேண்டுமென்ற நியதி ஏற்படுத்தப்படுகிறது. எனவே இதுபோன்ற சிக்கலான நிலையைத் தவிர்ப்பதற்கு அவர்கள் அப்ளை செய்யும்பொழுதே அவர்கள் தகுதி யுள்ளவர்களா, அல்லது தகுதியற்றவர்களா என்பதைப் பரிசீலனை செய்த பின் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலிலே அவர்கள் தகுதியுள்ளவர்களா, இல்லையா என்பதைப் பார்த்துத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் சில மாணவர்கள் தங்களுடைய உண்மையான நிலையைச் சொல்வதில்லை. அவர்கள் பணக்காரர்களாக இருந்தாலும்கூட ஏழைகள் என்று அப்ளை செய்கிறார்கள். பின்பு அவர்களுடைய உறவினர் அல்லது தெரிந்தவர்கள் யாராவது பெட்டிஷன் போட்டால் அதன்மேல் நடவடிக்கை எடுக்கும் பொழுது அவர்கள் பணக்காரர்கள் என்று தெரிந்தால் அவர்கள் பெற்ற பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : 50 சதவீதம் மார்க்குகளுக்கு குறைந்த மார்க்கு கள் பெற்ற மாணவர்களுக்குச் சிபாரிசு இருந்தால்தான் உபகாரச் சம்பளம் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. வெல்ஃபேர் ஆபீஸர் ஓரளவு அவர் உசிதம்போல் கொடுக்கலாம் என்று ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது. அந்தத் தொகையை, கொடுக்கப்படுகிற முழுத் தொகையில், பாதி அல்லது 75 சதவீதம் என்ற அளவுக்குக் கொடுக்க அவருக்கு அரசாங்கம் அதி காரங்கள் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவருக்கு அந்த அதிகாரத்தை இப்பொழுது கொடுக்கமுடியாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : உபகாரச் சம்பளங்கள் குறைந்த அளவுக்குத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை ஏற்றுவதற்கு அரசாங் கத்திற்கு அபிப்பிராயம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரைப் பொறுத்தமட்டிலும் கொடுப்பதைக் கொடுத்து வருகிறார்கள். மாநில சர்க்காரும் அதிகமாகத் தான் கொடுத்து வருகிறது.

Building for State Forensic Science Laboratory

* 249 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to house the State Forensic Science Laboratory in a new building; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) சென்னை மெரினாவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலு வலகத்திற்குப் பக்கத்தில் போரன்சிக் சைன்ஸ் மாநில ஆய்வுக் கூடத்திற் கென (சிமிட்டி கான்கிரீட் அஸ்திவாரம் போடுவது உட்பட) மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக 10.70 லட்சம் ரூபாய்க்குப் புதிய வரைப் படங்களையும் மதிப்பீடுகளையும் அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இது கட்டிப் பூர்த்தியானதும் நகரில் வெவ்வேறு மூன்று இடங்களில் இப்போது பணி யாற்றிவரும் மேற்படி ஆய்வுக் கூடத்தின் 3 பிரிவுகளும் அக்கட்டிடத்திற்கு மாற்றப்படும்.